வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில், இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கல்மண்டபம் பகுதியில் கட்டப்படவிருக்கும் குளிர்ரூட்டப்பட்ட பேருந்து நிறுத்த பணிகளை, அமைச்சர் பி.கே. சேகர் பாபு, கலாநிதி வீராசாமி எம்.பி. மேயர் திருமதி. ஆர்.பிரியா, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ. ஆகியோர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11க்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை2025 முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., தலைமையில் நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., முன்னிலையில் நடைபெற்றது. இதில் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதில் மாமன்ற உறுப்பினர்கள் கே.ராஜி, எம்.இ.ஸ்டாலின், வி.கிரிதரன், எஸ்.பாரதி, செல்வி ரமேஷ், ஹேமலதா கணபதி ரமணி மாதவன் வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், அ.மோசஸ், எம். ரூபன், மாவட்ட பிரதிநிதி வி. விஜயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

"திராவிடம் செய்தது என்ன? வாங்க பேசுவோம்..."

எழும்பூர் தொகுதி இளைஞர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம்!

இ.பரந்தாமன், எம்,எல்,ஏ.– நீட் தேர்வு உள்ளிட்ட கேள்விகளுக்கு விளக்கமளித்தார்!

சென்னை, அக். 11–

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி திராவிட சித்தாந்தத்தை, அதன் கொள்கைகளை, சாதனைகளை இன்றைய இளைஞர்களிடம் எடுத்துச் செல்லும் விதத்தில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்ட மன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் "திராவிடம் செய்தது என்ன? வாங்க பேசுவோம்..." எனும் தலைப்பில் எழும்பூர் தொகுதியில் தொடர் கலந்துரையாடல் கூட்டங்களை நடத்துவதை முன்னெடுத்திருக்கிறார்.

இம்முன்னெடுப்பின் முதல் கலந்துரையாடல் கூட்டம் 05.10.2025 அன்று வார்டு எண்.77, புளியந்தோப்பு, மோதிலால் தெரு ஆசிர்வாதபுரம் தெரு சந்திப்பில் கூட்டம் நடைபெற்றது.

50க்கும் மேற்பட்ட பகுதி இளைஞர்கள் கலந்து கொண்ட இக்கலந்துரையாடல் கூட்டத்தை ஒருங்கிணைத்த சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், "சமுதாயத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சமுதாயத்திற்கு நாங்கள் என்ன செய்து வருகிறோம்? என்பது குறித்த புரிதலை ஏற்படுத்துவதுதான் கலந்துரையாடலின் நோக்கம்" எனக் குறிப்பிட்டார்.

மேலும், அவ்விளைஞர்களுக்குத் திராவிடம் என்பதனை எளிமையாக விளக்கும் விதமாக, "எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தார்தான் படிக்க வேண்டும். மற்றவர்கள் படிக்கக் கூடாது என்றிருந்ததை மாற்றி, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், கல்வி, வேலைவாய்ப்பில் சமநிலை இருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியதுதான் திராவிடம்."

"இந்தக் கூட்டத்தில் ஏறத்தாழ சரி பாதியாக பெண்கள் கலந்து கொண்டுள்ளனர். இன்று பெண் பிள்ளைகள் அனைவருக்கும் கல்வி கிடைக்கும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இதற்குக் காரணம் திராவிட இயக்கம்தான். எந்தத் திராவிட இயக்கம் எங்களை உருவாக்கியதோ, எந்த திராவிடத்தால் நாங்கள் மக்கள் பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கிறோமோ, அந்தச் சித்தாந்தத்தை அடுத்த தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கான முன்னெடுப்புதான் இந்தக் கலந்துரையாடல்" எனக் குறிப்பிட்டார்.

"கரூருக்கு விஜய் பேசத்தான் வந்தார். ஆனால், அங்கு நடந்த சம்பவத்திற்கு விஜய் மேலேயே எல்லாத்தையும் போட்டுப் பேசுவது தப்புதானே" என ஒரு இளம் பெண் சட்டமன்ற உறுப்பினரிடம் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விக்குப் பதில் அளித்த அவர், "ஒரு நிகழ்ச்சியை ஒரு அமைப்பு ஏற்பாடு செய்யும்போது, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு மட்டுமல்ல, அந்த அமைப்பின் தலைவர்களுக்கும் பொறுப்பு உண்டு. நான் நடந்த சம்பவத்திற்கும் விஜய்க்கும் தொடர்பு இருப்பதாகக் கூறவில்லை. ஆனால், பொறுப்பு இருக்கிறது.

"கூட்டம் கட்டுக்கு அடங்காமல் விஜயைப் பார்க்க வந்ததற்கு அவர் பொறுப்பாக முடியாது. ஆனால், நேர வரையறை என ஒன்று இருக்கிறது. தலைவர் எல்லாரையும் காப்பாற்றியிருக்க முடியாது. ஆனால், தலைவருக்கு அடுத்த படியாக இருப்பவர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்திருக்கவேண்டும்.

"எங்கே தவறு நடந்திருக்கிறது?" என நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. சம்பவம் நடந்த பிறகு, விஜய் அங்கிருந்து பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்திருக்க வேண்டும். தனக்கு அடுத்து இருக்கும் இரண்டாம் கட்டத் தலைவர்களைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும்படி களத்தில் பணியாற்றச் செய்திருக்க வேண்டும்.

ஆனால், விஜய் என்னாகுமோ, ஏதாகுமோ எனப் பயந்துவிட்டார். நெருக்கடியான தருணங்களில் ஒரு தலைவனுக்குப் பயம் வரக் கூடாது. ஆனால், விஜய்க்குப் பயம் வந்துவிட்டது. ஒரு மருத்துவருக்குப் பயம் வந்தால், நோயாளியை அவரால் காப்பாற்ற முடியுமா?

தலைவன் என்பவன் பயந்து ஓடி விடக் கூடாது. தலைவன் என்பவன் நெருக்கடியாக தருணங்களில் களத்தில் நிற்க வேண்டும்.

விஜய் தலைவராக இருக்கக்கூடிய தகுதியை இழந்துவிட்டதாக நாங்கள் சொல்லவில்லை. நீதிமன்றம் சொல்லுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் பேசுகிறார்கள். ஆனால், முதலமைச்சர், "கரூர் சம்பவத்தில் இது தப்பா, அது தப்பா எனப் பேசுவதை விட்டுவிடுங்கள். நாமெல்லோரும் ஓர் அணியாக இருந்து, இனி இது போன்ற சம்பவம் எதிர்காலத்தில் இந்தியாவில் வேறெங் கும் நடைபெறாமல் இருக்கப் பாடுபட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு ஒன்றாக இருந்து உதவ வேண்டும்" எனக் கூறியிருக்கிறார். முதலமைச்சரின் இந்தக் கருத்துதான் திராவிடம். பாதிக்கப்பட்டவனின் தரப்பில் நிற்பதும், உதவுவதும், மீட்பதும்தான் திராவிடம்" எனக் குறிப்பிட்டார்.

"அனைத்துக் கட்சித் தலைவர்களும் நீட்டை ஒழிப்போம் என்கிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த பின் நீட்டை ரத்து செய்வோம் என்றீர்கள். ஆனால், நீங்களும் நீட்டை ரத்து செய்யவில்லை. இதனால் இதனை நம்பியிருக்கும் மாணவர்கள் ஏமாற்றமடைகிறார்கள். இதற்கு ஒரு விடிவு கிடைக்குமா? என அஜீத் என்ற இளைஞர் கேள்வி எழுப்பினார்.

அக்கேள்விக்குப் பதில் அளித்த இ.பரந்தாமன், "+1, +2வில் என்ன மார்க் எடுக்கிறார்களோ, அதைக் கொண்டுதான் கல்லூரி சேர்க்கை நடைபெறவேண்டும் என்பது தி.மு.க. வின் நிலைப்பாடு. 2008 வரை தமிழகத்தில் மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட படிப்புகளுக்குப் பொது நுழைவுத் தேர்வு இருந்தது. நீட் போலத்தான் இதுவும். பெயர்தான் வேறு. அச்சமயத்தில் முதல்வராக இருந்த கலைஞர் இந்தப் பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் சட்டத்தைக் கொண்டுவந்தார். மாணவர்கள் +1, +2வில் எடுக்கும் மதிப்பெண்களுக்குப் பதிலாக நுழைவுத் தேர்வில் எடுக்கும் மதிப்பெண்களை வைத்து சேர்க்கை நடைபெறுவதால், கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறித்தான் பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் சட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டுவந்தார்கள்.

திராவிடத்திற்கு எதிரான கூட்டம் இந்தச் சட்டத்திற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். கலைஞர் கொண்டுவந்துள்ள சட்டம் தவறு. திறமையான மருத்துவர்களை உருவாக்குவதற்கு நுழைவுத் தேர்வு அவசியம் என்று வாதாடினார்கள். இந்த வழக்கு உச்சநீதி மன்றம் வரையிலும் சென்றது.

உச்சநீதி மன்றம் கலைஞர் கொண்டு வந்த பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் 2008ஆம் சட்டத்தை ஆதரித்துத் தீர்ப்பளித்தது. இனி +1, +2 மதிப் பெண்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் சேர்க்கையை நடத்தலாம் என உத்தரவிட்டது. இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களும் கலைஞர் கொண்டு வந்த சட்டத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் தனது தீர்ப்பில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் குறிப்பிட்டிருந்தார்கள்.

காங்கிரசு கூட்டணி ஆட்சியில் தி.மு.க. ஒன்றிய அமைச்சரவையில் இருந்தபோதுதான் நீட் வந்தது என்று குற்றம் சாட்டுகிறார்கள். காங்கிரசு கூட்டணி அரசு நீட் தேர்வைக் கொண்டு வந்தபோது, கலைஞர் அதனை எதிர்த்தார். நீட் தேர்வுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்கு நடந்து அதில் வெற்றியும் பெற்றோம்.

நீட் வேண்டும் எனும் மாநிலங்கள் நீட்டை நடத்திக் கொள்ளலாம். நீட் தேர்வு கட்டாயம் கிடையாது என்றவாறு காங்கிரசு இந்த நீட் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கும் ஒரு பிரிவைக் கொண்டு வந்தது.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு இதற்கு எதிராக ஒரு வழக்குத் தொடுத்து, விதி விலக்குப் பிரிவை ரத்து செய்து, அனைத்து மாநிலங்களும் நீட்டை நடத்த வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினார்கள்.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த நீட் தேர்வை ரத்து செய்யும் சட்டமொன்றைச் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றியது. கல்வி என்பது பொதுப்பட்டியலில் இருப்பதாலும், நீட் தேர்வு அனைத்து மாநிலங்களிலும் நடப்பதாலும் தி.மு.க. நிறைவேற்றிய சிறப்புச் சட்டத்திற்குக் குடியரசு சுத் தலைவரின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியமாகிறது.

ஆனால், ஒன்றிய ஆட்சியை நடத்தி வரும் ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. வினர் திராவிடத்திற்கு, அதன் சித்தாந்தத்திற்கு எதிரானவர்கள் ஆகையால், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரும் இந்தச் சிறப்புச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் தராமல் தடுத்து வருகிறார்கள்.

நாம் கொண்டுவந்த சட்டம் குடியரசுத் தலைவரின் மேசையில் இருக்கிறது. மக்களுடைய பிரச்சினை யைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்கும் உள்ளது. ஆனால், ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க.வினரோ அரசியல் காழ்ப்புணர்வோடு நடந்து கொள்கிறார்கள். தமிழ்நாடு கல்வியில் முன்னேறிய மாநிலமாக இருப்பதால், அதனைச் சிறுமைப்படுத்தும் நோக்கத்தோடு நடந்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தென் மாநிலங்களிலும் பா.ஜ.க.வால் பெரும்பான்மை வெற்றியை பெற முடியாவிட்டாலும், வட இந்தியாவில் கிடைக்கும் வெற்றியைக் கொண்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் இருக்கிறார்கள். இதனைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கும் நீட் தேர்வு ரத்து சிறப்புச் சட்டத்திற்கு ஒப்புதல் தர மறுக்கிறார்கள்.

இதுதான் பிரச்சினையே தவிர, தி.மு.க. அரசு நீட் தேர்வுக்கு எதிராக எதுவும் செய்யவில்லை என்பதெல்லாம் அல்ல.

திராவிடம் குறித்த அடிப்படையான புரிதலை ஏற்படுத்தும் விதத்தில் இக்கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர்கள் அனைவருக்கும் மூன்று நூல்கள் அடங்கிய தொகுப்பைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பரிசாக அளித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 233 வது நாள்!

திரு.வி.க.நகர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,அக்.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 233 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (10.10.2025), திரு.வி.க.நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 73அ, நாச்சாரம்மாள் தெரு, புளியந்தோப்பு. 2) வட்டம் 76அ, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, KLP குடியிருப்பு வளாகம், பட்டாளம். சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமி கண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா. வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ் செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி. சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ். வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர். R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அண்ணாநகர் மண்டலம், செனாய் நகரில் உள்ள மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில்

வட்டார ஒருங்கிணைந்த கட்டளை - கட்டுப்பாட்டு மையம்!

மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை,அக்.11-

பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகையில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC) தொடங்கப்பட்டு, 24 x 7 மணி நேரமும் கண்காணிப்புப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ளும் வகையிலும், அந்தந்த வட்டாரங்களுக்குட்பட்ட பகுதிகளில் விரைந்து பணிகளை மேற்கொள்ளும் வகையிலும், மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை (ICCC) போன்று, மூன்று வட்டார அலுவலகங்களிலும் வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் (RICCC) உருவாக்கப்படும். இதன் மூலம், பொது இடங்களில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் வழியாக பெறப்படும் குறைபாடுகள் மீது, சம்பந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் அவர்களால், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க இயலும். இதற்காக ரூபாய் 3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை அறிவிப்பின் படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் மூன்று வட்டார அலுவலகங்களிலும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை திறந்து வைக்கும் விதமாக, அண்ணாநகர் மண்டலம், செனாய் நகரில் உள்ள மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று தொடங்கி வைத்தார்.

இந்த ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் மூலம் 1000த்திற்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள், 55 மழை சென்சார், 68 - FLOOD சென்சார், 40 - FLOOD -O- மீட்டர், 159 பம்ப் கண்காணிப்பு சாதனங்கள், சுரங்கப்பாதைகளில் 17 தானியங்கி தடை (BOOM BARRIERS), 18 சுற்றுச்சூழல் சென்சார்கள், 50 ஸ்மார்ட் துருவங்கள், 100 மாறுபடும் செய்தி காட்சிப்பலகை, 50 பொது அறிவிப்பு ஒலி பெருக்கி, 50 இடங்களில் உள்ள அவசர அழைப்பு பொத்தான் (Emergency Call Button), 50 பொது வைஃபை, பொதுமக்கள் குறைதீர்ப்பு (1913, சமூக ஊடகம், இணையதளம்), கிளவுட் (தரவு மையம் மற்றும் பேரிடர் மீட்பு மையம்), 24x7 செயல்பாடு ஆகியன தனித்துவமாக இயக்கப்படுகின்றன.

அந்தந்த வட்டார துணை ஆணையர்களுக்கு வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் மூலமாக மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கான செயல்பாடுகளை திறம்பட நிர்வகிப்பதற்கும், ஆக்கப்பூர்வமாக பணிகள் மேற்கொள்வதற்கும் இந்த கட்டுப்பாட்டு மையம் உதவி கரமாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் திருமதி மெட்டில்டா கோவிந்தராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

மதுரவாயல் தெற்குப் பகுதி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

ஏ,எம்,வி,பிரபாகரராஜா, எம்,எல்,ஏ., காரம்பாக்கம் க,கணபதி, எம்,எல்,ஏ., பங்கேற்பு!

சென்னை,அக்.11-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் காரம்பாக்கம், சமயபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள ஜெ.வி.பி. மினி ஹாலில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க.நரேன்கணபதி தலைமையில் இன்று சனிக்கிழமை (11.10.2025) காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆகவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் செ.ரவி, ச.சங்கர்கணேஷ், எம்.சி., பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.தியாகராஜன், டி.ஆர். விஜய், டி.ராஜேஷ், இரா. பா.உதயகுமார், டி.நரேஷ்குமார், இ.செந்தில்குமார், க. மூர்த்தி அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் க. நரேன் கணபதி அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்:

1. 13.10.2025 அன்று துணை முதலமைச்சர் அவர்கள் வருகை

2. கழக ஆக்கப் பணிகள்

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், புரசைவாக்கம்டவுட்டன் வணிகர் சங்க நிர்வாகிகளுடன் அப்பகுதி வணிகர்களின் கோரிக்கைகள் குறித்துக் கலந்தாலோசித்தார். இக்கூட்டத்தில் வணிகர் சங்கத் தலைவர் எம்.நஸீர் முகம்மது, செயலாளர் சிவா நடராஜன், பொருளாளர் ஜாஃபர் அலி, ஆலோசகர்கள் ரமேஷ், அப்போலா அனிபா, அப்துல்லா உள்ளிட்ட நிர்வாகிகளும் பகுதி வணிகர்களும் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 மற்றும் 3 ல் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ரூபாய் 1.48 கோடியில் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார் அதைத்தொடர்ந்து ஆரம்ப சுகாதார மையத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கிருந்த மருத்துவர்கள் பொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்தார் அப்பொழுது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர்கள் கலைச்செல்வி வெங்கடேசன் என்.கண்ணன், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர்கள், பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவிப்பு!

சென்னை,அக்.11-

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவிப்பு வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி இன்று (11.10.2025) மாலை 6.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத்தலைவர் ஆர். கர்ணல் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம. உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

13.10.2025 அன்று துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் வருகை குறித்து .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, காஞ்சிபுரம், இரயில்வே சாலையிலுள்ள அலங்கார் கடைக்கு எதிரே உள்ள சாலையில் மழைநீர் தேங்காவண்ணம் சாலையை உயர்த்தி, சீரமைத்து தர பொதுப்பணித்துறை அரசு அலுவலர்களுக்கு, கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி. எழிலரசன், அறிவுறுத்தினார். உடன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநகராட்சி ஆணையர், பொதுப்பணித்துறை அலுவலர்கள், செயற்பொறியாளர், நீர்வளத்துறை, பாலாறு வடிநிலக் கோட்டம், மின்சாரத்துறை அலுவலர்கள் இருந்தனர்.